**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**

**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.84 & 85 /2024 - PW- 10**

| | |
|---|---|
| Name | திரு. வினோத்குமார் |
| Husband/Father Name | மோகன் |
| Village /Area | கணபதிபுரம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கிராம உதவியாளர் |
| Age | 35 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.08.2025.

**(எதிரிகள் ஆஜர் ).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது அரக்கோணம் வட்டம் பள்ளூர் கிராமத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 2021ம் ஆண்டு போலீசார் தகவல் அளித்ததன் பேரில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் சேந்தமங்கலம் மேல் நிலைப்பள்ளிக்கு சென்றோம். அங்கிருந்த நிஷாந்த் மற்றும் திலீப் என்பவர்களை போலீசார் கொலை சம்பந்தமாக கைது செய்து வைத்திருப்பதாகவும் அவர்கள் அளிக்கும் வாக்குமூலத்தில் எங்களை சாட்சியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க நாங்களும் சம்மதித்து நிஷாந்த் மற்றும் திலீப் என்பவர்களிம் வாக்குமூலத்தை மடிக்கணிணியில் பதிவு செய்து நகலெடுத்து எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் நிஷாந்த் மற்றும் திலிப் ஆகியோர்களின் ஒப்புதல்

வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் முறையே அதசாஆ.10 மற்றும் அதசாஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எதிரிகளிடமிருந்து கருப்பு நிற பல்சர் வாகனமும், கத்தியும் கைப்பற்றினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது அதசாஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்திலுள்ள இரு சக்கர வாகனம் தான் எதிரிகளிடமிருந்த கைப்பற்றபட்ட வாகனம் அது ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யபட்டுள்ளது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் இரும்பு பூன் மரக்கைப்பிடியுடன் கூடிய பட்டை வடிவமுடைய கத்தி தான் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட கத்தியாகும். எதிரிகளை பார்த்து நீண்ட காலமானதால் தற்போது என்னால் சரிவர அடையாளம் காட்ட முடியவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் கணபதிபுரத்தில் வசித்து வருகிறேன். சம்பவம் நடந்த போதும் அதே விலாசத்தில் தா்ன வசித்தேன் என்றால் சரிதான். நான் பள்ளுர் கிராம நிர்வாக அலுவலருக்கு உதவியாளராக பணிபுரந்து வருகிறேன். நான் தற்போது அதே அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். சாட்சி கலைவாணன் அரிகில் பாடி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறார். பள்ளுர் மற்றும் கணபதிபுரம் வெவ்வெறு கிராமங்கள் என்று சொன்னால் சரிதான். நாங்கள் கருப்போ அல்லது பச்சை நிற மை யை பயன்படுத்த அதிகாரம் வழங்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

கிராம நிர்வாக அதிகாரியும் முத்திரையிட்டு அவருடைய கையெப்பத்தை நில நிற மையால் இடுவார் என்று சொன்னால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் என்னுடைய கையொப்பம் கருப்பு மையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். எனக்கு கண் பார்வை நன்றாக உள்ளது. கைப்பற்றுதல் மகஜரில உள்ள விவரங்கள் டார்க் நீல நிற மையிலும் ஆய்வாளரின் கையொப்பம் லைட் நீல நிற மையிலும் இடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் போலீசாரிடம் பேனா வாங்கி கையொப்பம் இடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் 8 ஆண்டுகளாக பள்ளுர் கிராமத்தில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு பள்ளுர் கிராம எல்லை மற்றும் எல்லை வரைவு பற்றி தெரியும் என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்தில் இந்த வழக்கு சம்பந்தமாக குறிப்பிட்ட சர்வே எண்ணிற்கு உண்டான சிட்டா மற்றும் பட்டா வாங்கி சென்றார்களா என்றால் இல்லை. சேந்தமங்களம் அரசு மேல்நிலைபள்ளியில் நான் சொல்ல சொல்ல போலீசார் மடிக்கணிணியில பதிவு செய்தார்களா என்றால் இல்லை. கிராம நிர்வாக அலுவலரிடமும் அவ்வாறு பெறவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவத்திறகு பிறகு போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. அரசாணையின் படி கிராம நிர்வாக அலுவலரும், கிராம உதவியாளரும் அலுவலம் உள்ள இடத்தில் தான் வசிக்க வேண்டும் என்றால் சரிதான். சம்பவ காலத்தில் கிராம நிர்வாக அலுவலர் செய்யாரில் வசித்து வந்தார். செய்யாரில் இருந்து பள்ளுருக்கு வர 2 மணி நேரம் ஆகும். தினமும் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு பேருந்தில் தான் வருவார். சம்பவ இடத்தில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் சவத்தை பார்த்தோமா என்றால் பார்த்தோம். அப்போது மதியம் 03.00 மணி இருக்கும் அப்போது பொதுமக்கள் சுமார்

100 பேர் இருந்திருப்பார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார்கள். அந்த சமயத்தில் நான் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் போலீசார் மதியம் 03.00 மணியளவில் இருந்ததோம் என்றால் சரிதான், அப்போது கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை கொடுத்து அதில் நான் கையொப்பம் போட்டேனா என்றால் காவல் நிலையத்திற்கு சென்று தான் புகார் கொடுத்தோம். அரக்கோணத்திலிருந்து காஞ்சிபுரம் செல்லும் சாலையில் கிழக்கு பக்கமாக சேந்தமங்கலம் செல்லும் சாலை உள்ளது. அந்த சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அரசு பள்ளி உள்ளது. அங்கு தொடர்ந்து கடைகளும் அதனை அடுத்து வீடுகளும் அதற்கடுத்து பள்ளி உள்ளது என்று சொன்னால் சரிதான். அரசு பள்ளியினுடைய பெரிய கேட் அருகே தான் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் அந்த சமயத்தில் பொதுமக்கள் 20, 30 பேர் இருந்தார்கள் அவர்களிடமும் போலீசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கிக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். தட்டச்சு செய்யப்பட்ட 2, 3 தாள்களில் நான் கையொப்பம் இட்டேன் அவைகளை தவிர்த்து வேறு ஆவணங்களில் கையொபம் போடவில்லை. கருப்பு நிற பல்சர் வண்டியின் பதிவெண் எனக்கு நினைவுள்ளாத என்றால் இல்லை. நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் 2 கத்திகளின் அளவை என்னால் கூற முடியாது என்று சொன்னால் சரிதான். அளவை கூற முடியாத கத்தியை தான் என் மூலுமாக குறியீடு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். யாரி யாரிடம் எந்தெந்த கத்திகள் இருந்தது என்று நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். யார் யாரிடமிருந்து எந்தெந்த துணிகள் எடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் பார்த்த சாபொ.1 ல் பல்சர் என்ற வார்த்தை இல்லை என்று சொன்னால்

சரிதான். நானும் கிராம நிர்வாக அலுவலரும் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்று போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் சாட்சியத்தில் பதிவு செய்துள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல.

**(ஒம்./–) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**